செப்டம்பர் 11

## பணியின் ஆரம்பம்

இயேசு வளர்ந்து பெரியவரானபோது அவர் செய்ய வேண்டிய முக்கியமான வேலை ஒன்றிலிருந்தது. 30 வயது ஆகும் வரை இவ்வேலையை அவர் ஆரம்பிக்கவில்லை. இது அவருடைய தகப்பனாகிய தேவனுக்குச் செய்ய வேண்டிய வேலை.



யோவான் மக்களிடம் சொன்னவற்றை உன் சொந்த வார்த்தைகளில் எழுது ____________
______________________________________
______________________________________
______________________________________

யோவானுடைய வேலையும் முக்கிய மானது தான் . ஆனால் தன்னைவிட மிக முக்கியமானவர் ஒருவர் உண்டு என்பது அவருக்குத் தெரியும்.

**அவர் யார்?** ____________________________



**தேவனே, மற்றெல்லாரையும்விட இயேசு கிறிஸ்து மிக முக்கியமானவராயிருப்பதற்காக உமக்கு நன்றி. ஆமென்.**

**மனப்பாட வசனம்**

**அவன்: என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல. மாற்கு 1:7**



செப்டம்பர் 12

## சோதிக்கப்பட்டவர்



நேற்று ராஜனுக்கு மகிழ்ச்சியான நாள். அவன் பள்ளி யின் விளையாட்டுக் குழுவில் இடம் பெற்றதாக அன்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று அவனுக்குக் கவலை நிறைந்த நாள். ஏனெனில் அவன் சரியாக விளையாடாததால் இன்று குழுவிலிருந்து அவனை நீக்கி விட்டார்கள்.

கர்த்தர் நீர் ______________________________ (வச.1) என்று கூறியபோது இயேசுவுக்கு மகிழ்ச்சியாயிருந்திருக்கும் அல்லவா?

ஆனால் அதற்குப்பின் அவருக்கு கடினமான நேரம் வந்தது. பிசாசு தவறானவற்றைச் செய்யும்படி அவரைத் தூண்டினான். ஆகவே சந்தோஷமாயிருக்கும்போதும் கவலையாயி ருக்கும் போதும் நமக்கு எப்படியிருக்கும் என்பதை இயேசு அறிவார்.



இப்போது என் உணர்ச்சி என்ன?

**[சந்தோஷம்/கவலை]** அதை இயேசுவிடம் கூறு.



**இயேசுவே, சோதனை வரும் போது உமக்குள் மகிழ்வுடன் இருக்க எனக்கு உதவும். ஆமென்.**

**மனப்பாட வசனம்**

**அன்றியும் நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. மாற்கு 1:11**